தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு : 94436 99066

dinakani2023@gmail.com
www.dhinakani.com

நமது
# தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்

மலர் : 02 | இதழ் :194 | 4 - பக்கம் | 10.02.2025 | திங்கள்கிழமை | விலை ரூ.6

KANI GYM
CALL:9894808044




**ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்.**

விளக்கம்:

ஒழுக்கம் உடையவராக வாழ்வதுதான் உயர்ந்த குடிப்பிறப்புக்கு எடுத்துக் காட்டாகும். ஒழுக்கம் தவறுகிறவர்கள் யாராயினும் அவர்கள் இழிந்த குடியில் பிறந்தவர்களாகவே கருதப்படுவர்.

## டெல்லி முதல்வர் பதவியை ராஜினாமா செய்தார் அதிஷி



புதுடெல்லி: டெல்லி பேரவைத் தேர்தலில் பாரதிய ஜனதா கட்சி பெரும்பான்மை வெற்றி பெற்று ஆட்சியை கைப்பற்றிய நிலையில், முதல்வர் அதிஷி இன்று தனது பதவியை ராஜினாமா செய்தார். இதற்கான கடிதத்தை துணைநிலை ஆளுநரிடம் அதிஷி வழங்கினார்.

நடந்து முடிந்த டெல்லி பேரவைத் தேர்தலில் டெல்லியின் மொத்தமுள்ள 70 தொகுதிகளில் பாரதிய ஜனதா கட்சி, 48 இடங்களில் வென்று வரலாற்றுச் சிறப்பு மிக்க வெற்றியை பெற்றது. இதன்மூலம் 26 ஆண்டுகளுக்கு பின்பு அக்கட்சி தேசிய தலைநகரில் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது. டெல்லியில் மூன்றாவது முறையாக ஆட்சியைத் தக்க வைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட ஆம் ஆத்மி கட்சி 22 இடங்களில் வென்று பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ளது. காங்கிரஸ் கட்சி தொடர்ந்து டெல்லியின் மூன்று சட்டப்பேரவைத் தேர்தல்களில் ஒரு இடங்களில் கூட வெற்றி பெறாமல், தொடர் தோல்வியை பதிவு செய்துள்ளது.

இந்த பின்னணியில், தேர்தல் முடிவுகள் வெளியான அடுத்த நாளான இன்று டெல்லி முதல்வர் அதிஷி, துணைநிலை ஆளுநர் வி.கே. சக்சேனாவை இன்று காலையில் சந்தித்தார். அப்போது தனது ராஜினாமா கடிதத்தை அவர் ஆளுநரிடம் வழங்கினார். அதனை ஏற்றுக்கொண்ட ஆளுநர், புதிய அரசு பதவியேற்கும் வரை முதல்வராக தொடர கேட்டுக்கொண்டார்.

முன்னதாக, டெல்லி சட்டப்பேரவையை கலைத்து ஆளுநர் உத்தரவிட்டார். இது தொடர்பான உத்தரவு அறிக்கை கடந்த 7ம் தேதி ஆளுநர் மாளிகை மூலம் வெளியிடப்பட்டது. சட்டப்பேரவை கலைப்பு 8ம் தேதி முதல் அமலுக்கு வருவதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், அது குறித்த தகவல் இன்றுதான் பத்திரிகைகளுக்கு தெரிவிக்கப்பட்டது.

## மணிப்பூர் முதல்வர் பதவியில் இருந்து பிரேன் சிங் ராஜினாமா



இம்பால்: வடகிழக்கு மாநிலமான மணிப்பூரில் இனக்கலவரம் தொடங்கி இரண்டு ஆண்டுகள் கடந்த நிலையில் அம்மாநில முதல்வர் பிரேன் சிங் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்டுள்ள மாநிலத்தில் தற்போதுள்ள பாஜக தலைமையிலான அரசு நம்பிக்கையில்லா தீர்மானம் மற்றும் காங்கிரஸ் தலைமையிலான எதிர்க்கட்சிகளின் நம்பிக்கை வாக்கெடுப்பை சந்திக்கும் அபாயம் உள்ள நிலையில் பிரேன் சிங் தனது ராஜினாமா கடிதத்தை ஆளுநர் அஜய் குமார் பல்லாவிடம் வழங்கினார்.

பிரேன் சிங் தனது ராஜினாமா கடிதத்தில், "இதுவரை மணிப்பூர் மக்களுக்காக சேவை செய்தது மிகப்பெரிய மரியாதை. மணிப்பூரின் ஒவ்வொரு மக்களின் நலன்களை பாதுகாப்பதற்காக மத்திய அரசு எடுத்த நடவடிக்கைகள், தலையீடுகள், வளர்ச்சிப் பணிகள், பல்வேறு திட்டங்களை செல்படுத்தியதற்காக மத்திய அரசுக்கு நன்றியுடையவனாக இருக்கிறேன்" என்று தெரிவித்துள்ளார். பிரேன் சிங் தனது ராஜினாமா கடிதத்தை கொடுக்கும் போது, பாஜக எம்எல்ஏகள், தலைவர்கள் உடன் இருந்தனர்.

## பிரதமர் மீதான நம்பிக்கையை எதிரொலித்தது டெல்லி தேர்தல்: சந்திரபாபு நாயுடு கருத்து



அமராவதி: ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு நேற்று அமராவதியில் செய்தியாளர்களிடம் பேசியதாவது:

டெல்லி மக்கள் சரியான நேரத்தில் சரியான முடிவை எடுத்துள்ளனர். தங்களின் சரியான ஆலோசனை திறனால் டெல்லி மக்கள் எடுத்துள்ள இந்த முடிவு நம் நாட்டின் தலைநகரின் தலையெழுத்தை மாற்றி அமைக்கும். சுற்றுசூழல் மாசுபாடு மற்றும் அரசியல் மாசுபாட்டை டெல்லி மக்கள் நிராகரித்துள்ளனர்.

ஆந்திராவில் ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் ஆட்சியில் மதுபான மாஃபியா உருவானது. இதே நிலைதான் டெல்லியிலும் ஏற்பட்டது. ஆந்திரா மற்றும் டெல்லியில் வசிக்கும் மக்கள் தங்களின் வாக்குகளால் ஆட்சி மாற்றத்தை கொண்டு வந்து தங்களை காப்பாற்றிக் கொண்டனர்.

நம் நாடு 2047-ல் உலகிலேயே ஒரு உன்னதமான நிலைக்கு செல்லும். டெல்லி தேர்தல் முடிவுகள் பிரதமர் மோடி மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை எதிரொலித்துள்ளது. இவ்வாறு சந்திரபாபு நாயுடு கூறினார்.

ஆந்திர துணை முதல்வர் பவன் கல்யாண் கூறுகையில், "2047-ல் நம் நாடு வளர்ச்சி அடைந்த நாடுகளின் பட்டியலில் இருப்பது உறுதி. இரட்டை இன்ஜின் அரசின் ஆட்சி மற்றும் நாட்டின் வளர்ச்சியை மக்கள் கண்கூடாக பார்த்து வருகின்றனர். இந்த நம்பிக்கையே டெல்லி தேர்தலில் எதிரொலித்துள்ளது. அமித் ஷாவின் சாணக்கியத்தனம், பிரதமர் மோடியின் திறன்மிக்க ஆட்சி டெல்லி தேர்தலின் முடிவுகளை காட்டுகின்றன" என்றார்.

## தமிழகத்தில் 38 ஐஏஎஸ் அதிகாரிகள் பணி இடமாற்றம் - முழு விவரம்




சென்னை: பிப்-10 தமிழகத்தில் 38 ஐஏஎஸ் அதிகாரிகளை பணி இடமாற்றம் செய்து தமிழக அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

இது குறித்து அரசு சார்பில் வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கை: கைத்தறித்துறை இயக்குநராக மகேஸ்வரி ரவிக்குமாரும், பால் உற்பத்தியாளர் மற்றும் பால் பண்ணை மேம்பாடு ஆணையரகத்தின் ஆணையராக அண்ணாதுரையும் நியமிக்கப்பட்டுள்ளனர். வினித் தமிழ்நாடு சுகாதார திட்டத்தின் திட்ட இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார். பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அரசு சிறப்புச் செயலாளராக கலையரசி நியமிக்கப்பட்டுள்ளார்.

பிற்படுத்தப்பட்ட நலத்துறை ஆணையராக சுரேஷ்குமாரும், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண்மை வணிக ஆணையராக ஆபிரகாம் நியமிக்கப்பட்டுள்ளனர். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மேலாண் இயக்குநராக கிரன் குராலா நியமிக்கப்பட்டுள்ளார். தமிழ்நாடு மின்விசை உற்பத்தி கழகத்தின் மேலாண்மை இயக்குநராக அல்பி ஜான் வர்கீஸ் நியமிக்கப்பட்டுள்ளார். தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மேலாண்மை இயக்குநராக அன்சூல் மிஸ்ரா நியமிக்கப்பட்டுள்ளார். சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் உறுப்பினர் செயலாளராக பிரபாகர் நியமிக்கப்பட்டுள்ளார். தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் மேலாண்மை இயக்குநராக கிராந்தி குமார் பாடியும், கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியராக பவன் குமார் கிரியப்பனவரும், தேனி மாவட்ட ஆட்சியராக ரஞ்சித் சிங்கும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சிறப்பு திட்ட செயலாக்கத்துறை அரசு கூடுதல் செயலாளராக ஷஜிவனாவும், செங்கல்பட்டு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர், வளர்ச்சி திட்ட அலுவலராக நாராயண சர்மாவும் நியமிக்கப்பட்டுள்ளனர். கோயம்புத்தூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியராக சங்கத் பல்வந்த் வாகே மற்றும் சேலம் மாவட்ட வளர்ச்சி முகமையின் திட்ட அலுவலராக பொன்மணி நியமிக்கப்பட்டுள்ளனர். தர்மபுரி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலராகவும், கூடுதல் ஆட்சியராகவும் கேத்தரின் சரண்யா, ஈரோடு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலராகவும், கூடுதல் ஆட்சியராகவும் அர்பித் ஜெயின் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஆவண காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி ஆணையரகத்தின் ஆணையராக ஹர் சகாய் மீனா நியமிக்கப்பட்டுள்ளார். நீர்வளத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளராக மங்கத் ராம் சர்மா நியமிக்கப்பட்டுள்ளார். மேலும், மாற்றுத்திறனாளி நலத்துறை அரசு செயலாளராக மதுமதியும், உயர் கல்வித் துறை அரசு செயலாளராக சமயமூர்த்தியும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறையின் அரசு முதன்மைச் செயலாளராக சத்ய பிரத சாகுவும், தமிழ்நாடு மின்வாரியம், தமிழ்நாடு மின் பகிர்மான கழகம், மின்விசை உற்பத்திக் கழகம் ஆகியவற்றின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநராக ஜெ.ராதாகிருஷ்ணன் உள்ளிட்டோர் மாற்றப்பட்டுள்ளனர் என அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## ஈரோடு கிழக்கில் முதன்முறையாக வென்ற திமுக - அதிக வாக்கு வித்தியாசத்தால் திமுகவினர் உற்சாகம்





ஈரோடு: பிப்-10 தொகுதி மறுசீரமைப்புக்கு பிறகு, ஈரோடு கிழக்கு தொகுதியில் முதன்முறையாக திமுக வெற்றி பெற்றுள்ளது. அக்கட்சியின் வேட்பாளராக போட்டியிட்ட வி.சி. சந்திரகுமார், இதுவரை இல்லாத அளவு அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது திமுக வட்டாரத்தில் உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது.

பவானிசாகர் அணை உருவாக காரணமாக விளங்கிய தியாகி ஈஸ்வரனில் தொடங்கி, 1951-ம் ஆண்டு தொகுதி சீரமைப்பிற்கு பின் இந்திய பொதுவுடமைக்கட்சியின் ராஜூ, காங்கிரஸ் வி.எஸ். மாணிக்கசுந்தரம், ஏ.எஸ். தட்சிணாமூர்த்தி ஆகியோர் ஈரோடு சட்டப்பேரவைத் தொகுதியில் வெற்றி பெற்றுள்ளனர்.

அதிமுக 'ஹாட்ரிக்' வெற்றி: திமுக உதயமான பின், மு.சின்னச்சாமி, மா.சுப்பிரமணியன் ஆகியோர் ஈரோடு எம்.எல்.ஏ. பதவியை அலங்கரித்தனர். அதிமுக உதயமான பின், ஈரோடு தொகுதி அக்கட்சியின் வசமானது. தற்போதைய திமுக அமைச்சரான சு. முத்துசாமி, அதிமுக சார்பில் ஈரோடு தொகுதியில் போட்டியிட்டு, 'ஹாட்ரிக்' வெற்றி பெற்றார்.

அதன்பின், 1989ல் ஈரோடு தொகுதி மீண்டும் திமுக வசமானது. அக்கட்சியின் வேட்பாளரான சுப்புலட்சுமி ஜெகதீசன் ஈரோடு எம்.எல்.ஏவாக வெற்றி பெற்றார். அதன்பின், அதிமுக சார்பில் மாணிக்கம், திமுக சார்பில் என்.கே.கே.பெரியசாமி, அதிமுக கே.எஸ். தென்னரசு, திமுக என். கே.கே.பி. ராஜா என மாறி மாறி இரு கட்சிகளும் வென்றன.

தொகுதி மறுசீரமைப்பு: கடந்த 2008-ம் ஆண்டு தொகுதி மறுசீரமைப்பின் போது ஈரோடு கிழக்கு மற்றும் ஈரோடு மேற்கு தொகுதி உருவாக்கப்பட்டது. ஈரோடு கிழக்கு தொகுதி உருவாக்கப்பட்டதும், 2011ல் நடந்த முதல் தேர்தலில் அதிமுக கூட்டணி சார்பில் தேமுதிக சார்பில் போட்டியிட்ட வி. சி.சந்திரகுமார் வெற்றி பெற்றார்.

அடுத்த தேர்தலில் அதிமுகவைச் சேர்ந்த தென்னரசு வெற்றி பெற்றார். 2021 தேர்தல் வெற்றி பெற்ற திருமகன் ஈவெரா மறைவிற்கு பின் 2023-ல் வென்ற ஈவிகேஎஸ் இளங்கோவனும் உடல்நலக் குறைவால் காலமானார். இதனால், மூன்றாவது முறையாக ஈரோடு கிழக்கு தொகுதிக்கு கடந்த 5-ம் தேதி தேர்தல் நடந்தது. இந்த தேர்தலில் ஈரோடு கிழக்கு தொகுதி முதன் முதலாக திமுக வசமாகியுள்ளது.

இதுகுறித்து திமுக நிர்வாகிகள் கூறியதாவது: ஈரோடு கிழக்கில் கடந்த 2016-ல் 7794 வாக்குகள் வித்தியாசத்தில் அதிமுகவின் தென்னரசுவும், 2021-ல் 8 ஆயிரத்து 904 வாக்குகள் வித்தியாசத்தில் திருமகன் ஈவெராவும் வென்றனர். அதன்பின் 2023-ல் நடந்த இடைத்தேர்தலில் ஈவிகேஎஸ் இளங்கோவன், 66 ஆயிரத்து 233 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்ற நிலையில், இந்த இடைத்தேர்தலில் திமுக வேட்பாளர் வி.சி. சந்திரகுமார் 91,558 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றுள்ளார்.

போராட்ட வரலாறு: கடந்த 2011 பொதுத்தேர்தலில் தேமுதிக சார்பில் இதே தொகுதியில் போட்டியிட்ட சந்திரகுமார், 10 ஆயிரத்து 644 வாக்குகள் வித்தியாசத்திலேயே வெற்றி பெற முடிந்தது. அப்போதைய அதிமுக அரசுக்கு எதிரான செயல்பாடுகளால், சுமார் இரண்டரை ஆண்டுகள் எம்.எல்.ஏ. பதவியில் இருந்து தற்காலிக தகுதி நீக்கம் செய்யப்பட்டு இருந்தார். அதன்பின் உச்சநீதிமன்றம் வரை சென்று தனது எம்.எல்.ஏ. பதவியை சந்திரகுமார் நிலைநாட்டினார். தற்போது பெரிய வாக்கு வித்தியாசத்தில் வென்றதன் மூலம் அடுத்த ஆண்டு பொதுத்தேர்தல் வெற்றிக்கு அச்சாரம் போட்டுள்ளார். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

# அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளியில் நவீன வசதிகள்: மாணவிகளுக்கான நாப்கின் எந்திரம் மற்றும் கழிவறை டிப் கிளீன் திட்டம் தொடக்கம்



பிப்-10 இன்றைய தினம் (5.2.25) அரசுமாதிரிமேல்நிலைப்பள்ளி MMDA காலனிஅரும்பாக்கத்தில் மாணவிகளின் கழிவறையில் நாப்கின் வழங்கும் எந்திரம் மற்றும் நாப்கின் எரியூட்டு எந்திரம் G2 Global நிறுவனத்தால் வழங்கப்பட்டது.

அனைத்து மாணவ மாணவியருக்கான கழிவறைகளை 15 நாட்களுக்கு ஒரு முறை டிப் கிளீன் செய்யும் நிகழ்வும் தொடங்கப்பட்டது இந்நிகழ்வை மாண்புமிகு அண்ணா நகர் சட்டமன்ற உறுப்பினர் திரு M.K. மோகன் மற்றும் மதிப்புமிகு ஆளும் கட்சி மன்ற தலைவர் திரு.ராமலிங்கம் அவர்கள் தொடங்கி வைத்தனர். இந்நிகழ்வில் பள்ளியின் தலைமை ஆசிரியர் முனைவர் இரா.சி.ஸ்ரீபிரியா பெருநகர சென்னை மாநகராட்சியின் சுகாதார அலுவலர் திரு. சீனிவாசன்

G2 Global நிறுவனத்தின் நிறுவனர் திரு. ஸ்ரீதர் மற்றும் பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர் இந்நிகழ்வில் நான்காம் வகுப்பு மாணவிகள் நவ்ரின் நிஷா மற்றும் அனிஷா பாத்திமா திருக்குறளில் கடவுள் வாழ்த்து அதிகாரத்தில் தொடங்கி 20 அதிகாரங்கள் (200) ஒப்புவித்து மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களிடமிருந்து பொன்னாடையும், ரூபாய் 500 ரொக்க பரிசும் மற்றும் அனைவரின் பாராட்டுக்களும் பெற்றனர்.

# பேசின்பிரிட்ஜ் மின்நிலையத்தில் திரவ இயற்கை எரிவாயு பயன்படுத்தப்படாது: மின்வாரியம் அறிவிப்பு




சென்னை: பிப்-10 செலவு அதிகமாக இருப்பதால், பேசின்பிரிட்ஜ் மின்நிலையத்தில் மின்னுற்பத்திக்கு திரவ இயற்கை எரிவாயுவை பயன்படுத்தும் முடிவை மின்வாரியம் கைவிட்டது.

சென்னை, பேசின்பிரிட்ஜ்ஜில் மின்வாரியத்துக்கு சொந்தமான எரிவாயு மின்நிலையம் உள்ளது. இங்கு தலா 80 மெகாவாட் திறன் உடைய 4 அலகுகளில் மின்னுற்பத்தி செய்யப்படுகிறது. இதற்கு எரிபொருளாக நாப்தா, இயற்கை எரிவாயு, அதிவேக டீசல் என ஏதேனும் ஒன்றை பயன்படுத்தலாம்.

நாப்தா விலை அதிகம் என்பதால் அதற்கு ஏற்ப மின்னுற்பத்தி செலவு அதிகரிக்கிறது. சென்னையில் உற்பத்திக்குத் தேவையான எரிவாயுவும் கிடைப்பதில்லை. இதனால், புயல், தேர்தல் சமயங்களில் மட்டும் டீசலை பயன்படுத்தி மின்னுற்பத்தி செய்யப்படுகிறது.

இந்தியன் ஆயில் நிறுவனம், சென்னை எண்ணூரில் திரவ இயற்கை எரிவாயு (எல்என்ஜி) முனையம் அமைத்துள்ளது. இதற்கு வெளிநாடுகளில் இருந்து கப்பலில் திரவநிலை எரிவாயு எடுத்து வரப்படுகிறது. அங்கிருந்து குழாய் வழித் தடத்தில் பிஎன்ஜி எனப்படும் 'பைப்டு நேச்சுரல் காஸ்' என்ற பெயரிலும், வாகனங்களுக்கு சிஎன்ஜி எனும் அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயுவாகவும் விநியோகம் செய்யப்படுகிறது.

எனவே, எண்ணூர் முனையத்தில் இருந்து எரிவாயுவை எடுத்து வந்து பேசின்பிரிட்ஜ் மின்நிலையத்தின் இரு அலகுகளில் பயன்படுத்த முடிவு செய்யப்பட்டது. இதற்காக, எண்ணூர்-பேசின்பிரிட்ஜ் இடையே குழாய் வழித்தடம் அமைப்பது, அதற்கான செலவு, மின்னுற்பத்தி செலவு உள்ளிட்ட ஆய்வுகளில் மின்வாரியம் ஈடுபட்டது. இந்த ஆய்வின் அடிப்படையில், ஒரு யூனிட் மின்னுற்பத்திக்கு ரூ.13 செலவாகும். வெளிநாட்டில் இருந்து எரிவாயு இறக்குமதி செய்யப்படுவதால், சர்வதேச நிலவரத்துக்கு ஏற்ப விலை தொடர்ந்து மாறுபடும்.

அதற்கு ஏற்ப மின்னுற்பத்தி செலவு மேலும் அதிகரிக்கும் என தெரிய வந்தது. தற்போது, மின்சார சந்தையில் ஒரு யூனிட் மின்சாரம் ரூ.5-க்கு குறைவாக கிடைக்கிறது. உச்சநேரங்களில் அதிகபட்சம் ரூ.10-க்கு கிடைக்கிறது. இதனுடன் ஒப்பிடும் போது வெளிநாட்டு எரிவாயுவை பயன்படுத்துவது செலவு அதிகம். எனவே, திரவ இயற்கை எரிவாயுவை பேசின் பிரிட்ஜ் மின்நிலையத்தில் பயன்படுத்தும் முடிவு கைவிடப்பட்டது. அவசர காலத்தில் வழக்கம் போல் டீசல் பயன்படுத்தி மின்னுற்பத்தி செய்யப்படும் என மின்வாரிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

# திருப்பரங்குன்றம் மலை விவகாரத்தில் முற்றிலும் அரசியல் இருக்கிறது - பிரேமலதா விஜயகாந்த் குற்றச்சாட்டு



மதுரை: பிப்-10 திருப்பரங்குன்றம் மலை விவகாரத்தில் முற்றிலும் அரசியல் இருக்கிறது என மதுரையில் தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் குற்றம் சாட்டினார். மதுரை எல்லீஸ் நகர் பகுதியில் தேமுதிக மாவட்ட நிர்வாகி ஒருவரின் இல்ல திருமண விழாவில் அக்கட்சியின் பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் பங்கேற்று, மணமக்களை வாழ்த்தினார்.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியது: "ஆளுங்கட்சி தங்களது பிரச்சினைகளிலிருந்து காப்பாற்றிக் கொள்ள எதையாவது ஒன்றை சொல்லி தப்பிக்கின்றனர். மத்திய பட்ஜெட் குறித்து தமிழக முதல்வர் கூறுவது போன்று இல்லை. எல்லாம் மாநிலத்திற்கும் பொதுவாகத்தான் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. டெல்டா மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு முதல்வர் என்ன செய்தார். நானும் டெல்டாக்காரன் என பேசுகிறார்.

எப்போதுமே மத்திய அரசை குற்றம் சாட்டும் தமிழக அரசு என்னசெய்கிறது? இந்தியாவில் அதிக கடன் இருக்கும் மாநிலம் தமிழ்நாடு. இது போன்ற உதாரணங்கள் இருக்கும்போது, சாக்குபோக்கு சொல்லி முதல்வர் தப்பிக்க முடியாது. தமிழ்நாட்டில் முதல் முறையாக யார் கூட்டணியும் இன்றி தனித்துப் போட்டியிட்டு சாதனை செய்தது தேமுதிக மட்டுமே.

75 ஆண்டு கட்சியான திமுக கூட்டணியை தவிர்த்து தனித்து நிற்க முடியுமா? அதிமுக, பாஜக தனித்து நிற்க முடியுமா? தமிழகத்தில் சிறு குழந்தைகள், மாணவிகள் வயதானவர்கள் வரை பாலியல் வன்கொடுமையால் பாதிக்கப்படுகின்றனர். இதற்கு டாஸ்மாக், கஞ்சா புழக்கமே காரணம். பாலியல் வன்கொடுமையில் குற்றத்தில் ஈடுபடுபவர்களுக்கு மரண தண்டனை கொடுக்க வேண்டும்.

விஜய் எங்கள் வீட்டு பையன். அரசியல் வேறு ,சினிமா வேறு என்பதை அவர் புரிந்து கொள்ளவேண்டும். நாலுக்கு நாலு சுவற்றில் அமர்ந்து கொண்டு அரசியல் செய்யாமல் வீதிக்கு சென்று மக்களை சந்திக்க வேண்டும். இது பற்றி விஜய்யிடமும் நேரில் தெரிவித்திருக்கிறேன். சினிமாத்துறையில் அனைத்தையும் விட்டுவிட்டு அரசியலுக்கு வந்த அவரை நாம் பாராட்டவேண்டும். என்ன சாதிக்கப் போகிறார், சரித்திரம் படைக்கப் போகிறார் என்பதை பார்க்க நாங்களும் காத்திருக்கிறோம். நாலுக்கு - நாலு அறையில் அமர்ந்து பேசுவதை விட்டுட்டு அவர் வெளியே வரவேண்டும்.

திருப்பரங்குன்றம் மலை விவகாரத்தில் இந்து- முஸ்லிம் மக்கள் அண்ணன், தம்பிகளாக பல ஆண்டாக வாழ்கின்றனர். இத்தனை ஆண்டாக வராத பிரச்சனை இப்போது வருகிறது. இதற்கு பின்னால் முற்றிலும் அரசியல் இருக்கிறது. மதம், ஜாதியை பிரித்து அரசியல் செய்ய பார்க்கின்றனர். இந்துக்கள் இஸ்லாமியர்களிடையே எந்த பிரிவும் இல்லை. இது ஆபத்தான விஷயம். திமுக ஆட்சிக்கு வந்தால் இது போன்ற சம்பவம் நடப்பது வழக்கமாகிறது. திருப்பரங்குன்றம் மலை விவகாரத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

டெல்லியில் கேஜ்ரிவால் தோல்வி அடைந்து இருக்கிறார். 15 ஆண்டாக ஆட்சியில் இருந்த அவர்கள் மீது ஊழல் குற்றச்சாட்டு இருந்தது. அரவிந்த் கேஜ்ரவால் ஊழல் குற்றத்தை சரி செய்து நிரூபிக்க முடியவில்லை. தமிழக ஆளுநர் சட்டசபைக்கு வருவது, கோபித்துக் கொண்டு செல்வது, தேநீர் விருந்தில் சில கட்சிகள் கலந்து கொள்வது, அனைத்தையும் பார்த்துக் கொண்டே இருக்கிறோம். அனைத்துக்கும் பின்னால் அரசியல் இருக்கிறது. ஆளுநர் அவரது உரிமையை பேசுகிறார். ஆளுங்கட்சியும் அவர்களின் உரிமையை பேசுகிறார்கள். இருவரும் முறைப்பதால் மக்களுக்கு தான் பிரச்னை.

234 தொகுதிகளிலும் எங்கள் கூட்டணி ஜெயிக்கும். திமுக மீது மக்களுக்கு கோபம் இருக்கிறது. தேர்தலுக்காக திமுக இனிமேல் நீட் மற்றும் மதத்தை கையில் எடுப்பர். தமிழகத்தில் பட்டிதொட்டி எங்கும் தேமுதிக சிறப்பாக உள்ளது'' இவ்வாறு பிரேமலதா கூறினார்.

# தமிழக மீனவர்கள் 14 பேரை கைது செய்தது இலங்கை கடற்படை



இலங்கை கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்ட 14 தமிழக மீனவர்கள்.

ராமேசுவரம்: பிப்-10 தமிழக மீனவர்கள் 14 பேர் இலங்கை கடற்படையினரால் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டனர்.

ராமேசுவரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து சனிக்கிழமை சுமார் 500 விசைப்படகுகளில் 2,500க்கும் மேற்பட்ட மீனவர்கள் கடலுக்குச் சென்றனர். மீனவர்கள் வடக்கு மன்னார் கடற்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது ஜான்போஸ், சுதன் ஆகிய இருவருக்குச் சொந்தமான இரண்டு விசைப்படகுகள், இலங்கை கடற்படையினரால் நள்ளிரவில் சிறைப்பிடிக்கப்பட்டன.

இரண்டு விசைப்படகுகளையும் பறிமுதல் செய்த இலங்கை கடற்படையினர், படகுகளிலிருந்த ஜான் போஸ், அந்தோணி, நிலாகரன், நிகிதன், சேசு பூங்காவனம், சந்தியா, கார்லோஸ், நிஷாந்த், டூவிஸ்டன், அய்யாவு, அந்தோணி டிமக், அருளானந்தம், ஜெலஸ்டின், ஆரோன் ஆகிய 14 மீனவர்களையும் இரணை தீவு கடற்படை முகாமிற்கு கொண்டு சென்று, பின்னர் அங்கிருந்து யாழ்பபாணம் மாவட்ட மீன்வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர். 14 மீனவர்களும் கிளிநொச்சி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, வவுனியா சிறையில அடைக்கப்பட உள்ளனர்.

கடந்த ஒரு மாதத்தில் மட்டும் 10 படகுகள் சிறைப்பிடிக்கப்பட்டு 88 தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யபபட்டடுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மதவெறி சக்திகளின் சூழ்ச்சிகளை முறியடிக்க வேண்டும்: மதச்சார்பற்ற கட்சிகள் கூட்டாக வேண்டுகோள்

மதவெறி பிப்-10 சக்திகளின் சூழ்ச்சிகளை முறியடித்து, மதவெறி அமைப்புகளை தமிழக மக்கள் முழுமையாக புறக்கணிக்க வேண்டும் என மதச்சார்பற்ற கட்சிகள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

இதுகுறித்து, திமுக பொதுச் செயலாளர் துரைமுருகன், தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை, மதிமுக பொதுச் செயலாளர் வைகோ, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் பெ. சண்முகம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் முத்தரசன் உள்ளிட்ட மதச்சார்பற்ற கட்சிகள் வெளியிட்ட கூட்டறிக்கையில் கூறியிருப்பதாவது: இந்தியாவின் பன்மைத்துவத்துக்கும், மதநல்லிணக்கத்துக்கும் சிறந்த எடுத்துக்காட்டுகளில் ஒன்று தமிழகமாகும். இங்குள்ள பழனியாண்டவர் கோயில், மதுரை மீனாட்சியம்மன் கோயில், அன்னை வேளாங்கண்ணி ஆலயம், நாகூர் தர்கா, ஏர்வாடி தர்கா போன்ற அனைத்து வழிபாட்டுத் தளங்களிலும் மதவேறுபாடு இன்றி பொதுமக்கள் வழிபடுவதே இதற்கு சான்று. இத்தகைய, தமிழகத்தில் மக்களை மதரீதியாக பிளவுபடுத்தி அதில் அரசியல் ஆதாயம் தேடுவதை பாஜகவும், ஆர்எஸ்எஸ், விஸ்வ இந்து பரிஷத் உள்ளிட்ட வலதுசாரி அமைப்புகளும் செயல்பட்டு வருகின்றன. பாஜகவின் தேர்தல் அறுவடைக்காக தமிழகத்தின் ஒற்றுமையை சீர்குலைத்திட திட்டமிட்டு சதிகளை அரங்கேற்றி வருகின்றன. ஆனால் தமிழகத்தின் நலன்களுக்கான சொல்லிக் கொள்ளும்படி எதையும் மத்திய பாஜக அரசு செய்யவில்லை. இந்நிலையில், மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றத்தை மையப்படுத்தி தற்போது தனது அடுத்தகட்ட மதவெறித் திட்டத்தை பாஜகவும் அதன் சங்பரிவார அமைப்புகளும் அரங்கேற்றியுள்ளன.

திருப்பரங்குன்றம் மலை அடிவாரத்தில் சுப்பிரமணிய சுவாமி கோயிலும், மலையின் தென்புறத்தில் காசி விஸ்வநாதர் கோயிலும், கீழ்புறம் உச்சிப்பிள்ளையார் கோயிலும் அமைந்துள்ளன. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக சமணம் இருந்திருக்கிறது. மலையின் ஒரு பகுதியில் சிக்கந்தர் பாதுஷா அவுலியா தர்கா உள்ளது. இங்கு நீண்ட காலமாக மக்கள் எவ்வித பிரச்சினையும் இன்றி வழிபாடு நடத்தி வருகின்றனர். முன்னோர்கள் காலத்தில் இருந்தே முருகன் கோயிலில் பூசைகளும், சிக்கந்தர் தர்காவில் அவ்வப்போது ஆடு, கோழிகளை நேர்த்திக்கடனாக செலுத்தி அன்னதானம் (கந்தூரி) செய்வதும் வழக்கமாக இருந்துள்ளது. இஸ்லாமியர்கள் மட்டுமின்றி இந்துக்களும் தர்க்காவில் நேர்த்திக்கடன் நிறைவேற்றுகின்றனர். மேற்கண்ட வழிபாட்டு முறைகள் குறித்து உண்மைக்கு மாறான செய்திகளை பரப்பி மக்கள் மத்தியில் பாஜக, ஆர்எஸ்எஸ் இந்துத்துவா அமைப்புகள் பதற்றத்தை ஏற்படுத்தி வருகின்றன. முருகன் கோயிலுக்கு ஏதோ ஆபத்து ஏற்பட்டுள்ளதாக பொய் செய்திகளைப் பரப்பி சமூக வலைதளங்களில் மதவெறிப் பிரச்சாரங்களில் ஈடுபட்டன. இதையடுத்து திருப்பரங்குன்றத்தில் உள்ள அனைத்து கட்சி தலைவர்களும் ஒன்றிணைந்து மதவெறி சக்திகள் மீது உரிய நடவடிக்கை எடுக்க மாவட்ட ஆட்சியரை வலியுறுத்தினர். மாவட்ட நிர்வாகமும் நடவடிக்கை மேற்கொண்டது. மதவெறி சக்திகளின் சூழ்ச்சிகளை முறியடித்து மக்கள் ஒற்றுமையையும், அனைத்து பகுதி மக்களின் வழிபாட்டு உரிமையையும் பாதுகாக்க திருப்பரங்குன்றம் மக்கள் இப்போதுபோல் எப்போதும் உறுதிகாட்ட வேண்டும். தமிழ்நாடு இத்தகைய மதவெறி அமைப்புகளை முழுமையாக புறக்கணித்திட வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம். அனைத்து மதச்சார்பற்ற கட்சிகளும் மதச்சார்பின்மை மற்றும் மக்கள் ஒற்றுமை காப்பதில் உறுதியுடன் செயல்பட்டு, அனைத்து மக்களின் வழிபாட்டு உரிமையை பாதுகாப்போம் என்று உறுதி கூறுகிறோம். இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வரும் கல்வியாண்டில் 35.12 லட்சம் மாணவர்களுக்கு பஸ் பாஸ் - போக்குவரத்து அதிகாரிகள் தகவல்



சென்னை: பிப்-10 வரும் கல்வியாண்டில் 35.12 லட்சம் மாணவர்களுக்கு பஸ் பாஸ் வழங்க நடவடிக்கை எடுத்து வருவதாக போக்குவரத்து அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக அவர்கள் கூறியதாவது: ''அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் 1 முதல் 12-ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள், அரசுப் பள்ளி, அரசு கலை, அறிவியல் கல்லூரி, பாலிடெக்னிக் கல்லூரி உள்ளிட்டவற்றில் பயிலும் மாணவர்கள், அரசு பேருந்துகளில் கட்டணமில்லாமல் பயணிக்கும் வகையில் ஸ்மார்ட் அட்டை வடிவிலான பஸ் பாஸ் வழங்கப்படுகிறது.

அந்த வகையில் நடப்பாண்டு 35.12 லட்சம் பஸ் பாஸ் தயாரிப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கான ஒப்பந்த அறிவிப்பும் வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி, ஒப்பந்தத்தின் மதிப்பு சுமார் ரூ.1.50 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. பிப்.17-ம் தேதியுடன் டெண்டர் முடிவடையும் நிலையில், தேர்வான நிறுவனத்திடம் மாணவர்களின் விவரங்களை வழங்கி விரைவில் அச்சிட்டு வழங்க அறிவுறுத்துவோம்.

தற்போது தோராயமாகவே மாணவர்களின் எண்ணிக்கை கணக்கிடப்பட்டுள்ளது. தகுதியுள்ள அனைவருக்கும் பாஸ் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். அதே நேரம், மாணவர்கள் சீருடை அணிந்திருந்தாலே கட்டணமில்லா பயணத்தை அனுமதிக்க வேண்டும் எனவும் நடத்துநர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.'' இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

# சாதிவாரி கணக்கெடுப்பு தொடர்பாக சென்னையில் நாளை கலந்தாய்வு கூட்டம்: அன்புமணி தகவல்



சென்னை: பிப்-10 தமிழ்நாட்டில் சமூகநீதிக்கு பெரும் ஆபத்து ஏற்பட்டுள்ள நிலையில், சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்படுவதை உறுதி செய்ய மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கை குறித்து சென்னையில் நாளை கலந்தாய்வுக் கூட்டம் நடைபெறவிருப்பதாக பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில், “தூங்குபவர்களை எழுப்பலாம்... ஆனால், தூங்குபவர்களைப் போல நடிப்பவர்களை எழுப்ப முடியாது என்பதைப் போலத் தான் சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பை நடத்துவதில் தமிழகத்தை ஆளும் திராவிட மாடல் அரசின் செயல்பாடுகள் உள்ளன. தமிழ்நாட்டில் 69% இட ஒதுக்கீடு உள்ளிட்ட சமூகநீதியை பாதுகாப்பதற்கு சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பை நடத்த வேண்டியது மிகவும் இன்றியமையாத் தேவை என்பதை அறிந்தும் அந்தக் கடமையைச் செய்ய திமுக அரசு மறுப்பது கண்டிக்கத்தக்கதாகும். தமிழ்நாட்டின் இன்றையத் தனிப்பெரும் தேவை சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு தான். சமூக நீதி சார்ந்து தமிழ்நாடு மிகப்பெரிய அச்சுறுத்தலை எதிர்கொண்டு வருகிறது. இந்தியாவில் முதன்முறையாக, உச்சநீதிமன்றத்தின் ஆணையையும் மீறி, 69% இட ஒதுக்கீட்டை நாடாளுமன்ற சிறப்புச் சட்டத்தின்படி, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் ஒன்பதாவது அட்டவணையில் சேர்க்க வைத்து செயல்படுத்தி வரும் பெருமை தமிழ்நாட்டுக்கு உண்டு. ஆனால், அந்தப் பெருமை இப்போது ஆட்டம் கண்டு கொண்டிருக்கிறது. தமிழ்நாட்டில் 69% இட ஒதுக்கீடு நடைமுறைப்படுத்தப்படுவதை எதிர்த்து சமூகநீதிக்கு எதிரான சக்திகள் தொடர்ந்த வழக்குகள் உச்சநீதிமன்றத்தில் எப்போது வேண்டுமானாலும் விசாரணைக்கு வரக் கூடும். 69% இட ஒதுக்கீட்டை எதிர்த்து 1994 ஆம் ஆண்டு தொடரப்பட்ட வழக்கில் 13.07.2010 ஆம் தீர்ப்பளித்த அப்போதைய உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி எஸ்.எச்.கபாடியா தலைமையிலான அமர்வு, “69% இட ஒதுக்கீடு செல்லும். அதேநேரத்தில் ஓராண்டுக்குள் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தி, அதனடிப்படையில் இட ஒதுக்கீட்டின் அளவை தீர்மானிக்க வேண்டும்” என்று ஆணையிட்டது. ஆனால், அப்போதிருந்த தமிழக அரசுகள் சாதிவாரி கணக்கெடுப்பை நடத்தாமல் இட ஒதுக்கீட்டை உறுதி செய்ததால், 69% இட ஒதுக்கீட்டை எதிர்த்து சிலர் 2012-ஆம் ஆண்டில் மீண்டும் வழக்கு தொடர்ந்தனர். அந்த வழக்கை விசாரித்த உச்சநீதிமன்ற நீதிபதிகள், 69% இட ஒதுக்கீட்டை எவ்வாறு நியாயப்படுத்த முடியும்? என்று வினா எழுப்பினர். அந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு வரும் போது, தமிழ்நாட்டில் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் மக்கள் தொகை 68%க்கும் அதிகம் என்பதை ஆதாரங்களுடன் அரசு நிரூபிக்க வேண்டும். அவ்வாறு நிரூபிக்காவிட்டால், தமிழ்நாட்டில் 69% இட ஒதுக்கீடு செல்லாது என்று தீர்ப்பளிப்பதற்கான ஆபத்து இருக்கிறது. அந்த ஆபத்தை முடியடிப்பதற்கான ஒரே வழி சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்துவது தான். அவ்வாறு சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்துவது மிகவும் எளிதானது என்பது மட்டுமின்றி, உச்சநீதிமன்றத்தாலும், உயர்நீதிமன்றங்களாலும் ஏற்றுக்கொள்ளத்தக்கவை தான் என்பதை அண்மையில் பிகாரிலும், தெலுங்கானாவிலும் நடத்தப்பட்ட சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்புகள் உறுதி செய்திருக்கின்றன.

# அதிமுக கொண்டு வந்த திட்டங்களை ஸ்டிக்கர் ஒட்டி முதல்வர் ஸ்டாலின் திறந்து வருகிறார்: இபிஎஸ் குற்றச்சாட்டு



கோவையை பிப்-10 அடுத்த அன்னூர் கஞ்சபள்ளியில் நடைபெற்ற நன்றி பாராட்டு விழாவில் மாட்டு வண்டியில் மேடைக்கு வந்த அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி. படம்: ஜெ.மனோகரன்.

அதிமுக மீண்டும் ஆட்சிக்கு வரும்போது அத்திக்கடவு-அவிநாசி 2-வது திட்டம் நிறைவேற்றப்படும் என்று அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி கூறினார். அத்திக்கடவு-அவிநாசி திட்டம் நிறைவேற்றக் காரணமாக இருந்ததாக முன்னாள் முதல்வரும், அதிமுக பொதுச் செயலாளருமான பழனிசாமிக்கு, அத்திக்கடவு-அவிநாசி திட்டக் கூட்டமைப்பினர் சார்பில் கோவை மாவட்டம் அன்னூர் கஞ்சப்பள்ளி பகுதியில் நேற்று பாராட்டு விழா நடைபெற்றது. விழாவில் பழனிசாமி பேசியதாவது: 60 ஆண்டுகால கனவுத் திட்டமான அத்திக்கடவு-அவிநாசி திட்டத்தை நிறைவேற்றியதன் மூலம் பிறவிப் பயனை அடைந்துவிட்டேன். பணத்தாலோ, புகழாலோ என்னை யாராலும் அடிமைப்படுத்த முடியாது. 2018-ல் ரூ.1,652 கோடியில் அரசாணை வெளியிட்டு, மாநில அரசு நிதியில் இத்திட்டத்தை செயல்படுத்த உத்தரவிட்டேன். அதிமுக ஆட்சியில் 85 சதவீத பணிகள் நிறைவேற்றப்பட்டன. மீதமுள்ள 15 சதவீத பணியை ஓராண்டில் செய்திருக்கலாம். ஆனால், அதிமுக கொண்டு வந்த திட்டம் என்பதால் திமுக கிடப்பில் போட்டு, காலதாமதமாக தொடங்கி வைத்துள்ளனர். அத்திக்கடவு-அவிநாசி 2-வது திட்டத்துக்கு அதிமுக ஆட்சியில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டது. ஆட்சி மாற்றத்தால் அத்திட்டம் கிடப்பில் போடப்பட்டது. மீண்டும் அதிமுக ஆட்சி மலரும்போது, 2-வது திட்டம் நிறைவேற்றப்படும். இதேபோல, ஆனைமலையாறு - நல்லாறு, பாண்டியாறு-புன்னம்புழா திட்டங்களும் அதிமுக ஆட்சிக்கு வரும்போது நிறைவேற்றப்படும். நடந்தாய் வாழி காவிரி திட்டம், கோதாவரி-காவிரி இணைப்பு திட்டம் ஆகியவை கிடப்பில் போடப்பட்டுள்ளன. அதிமுக ஆட்சியில் கொண்டு வந்த திட்டங்களை ஸ்டிக்கர் ஒட்டி முதல்வர் ஸ்டாலின் திறந்து வருகிறார். இவ்வாறு அவர் பேசினார். முன்னதாக, பழனிசாமி மாட்டு வண்டியில் விழா மேடைக்கு அழைத்து வரப்பட்டார். விவசாயிகள் சார்பில் தானியங்கள், கீரை, காய்கறி, பழங்கள் ஆகியவை சீர் வரிசையாக வழங்கப்பட்டன. மேலும், பசு மாடு, கன்று, மாட்டு வண்டி ஆகியவையும் வழங்கப்பட்டன. விழாவில், முன்னாள் அமைச்சர்கள் எஸ்.பி.வேலுமணி, தங்கமணி, எம்எல்ஏ-க்கள் அம்மன் கே.அர்ச்சுணன், பிஆர்ஜி.அருண்குமார், பொள்ளாச்சி ஜெயராமன், ஏ.கே.செல்வராஜ், செ.தாமோதரன், கே.ஆர்.ஜெயராம், சூலூர் கந்தசாமி, அத்திக்கடவு-அவிநாசி திட்ட கூட்டமைப்பு நிர்வாகிகள் நடராஜன், கணேஷ், சம்பத், பெரியசாமி, ரவிகுமார் மற்றும் பாஜக விவசாய அணி மாநிலத் தலைவர் ஜி.கே.நாகராஜ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# திண்டிவனம் கல்லூரி மாணவிக்கு பாலியல் தொல்லை: போக்சோவில் பேராசிரியர் கைது



விழுப்புரம்: பிப்-10 திண்டிவனம் கலைக் கல்லூரியில் முதலாம் ஆண்டு படிக்கும் கல்லூரி மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுத்ததாக பேராசிரியர் ஒருவர் போக்சோவில் கைது செய்யப்பட்டுள்ளார். திண்டிவனத்தில் அரசு கலைக் கல்லூரி செயல்பட்டு வருகிறது. இந்த கல்லூரியில் சுமார் 1000-க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். இந்தக் கல்லூரியில் முதலாம் ஆண்டு படித்து வரும் கல்லூரி மாணவிக்குப் புதுச்சேரி, ஜெயமூர்த்தி ராஜா நகர், ஜினியர் காலணியில் வசிக்கும் குமார் (48) என்பவர் வகுப்பு பேராசிரியராக பணியாற்றி வருகிறார். இந்த நிலையில், கடந்த செப்டம்பர் மாதம் முதல் தற்போது வரை தொலைப்பேசி மூலமாகவும், சமூக வலைதளம் மூலமாகவும் அம்மாணவிக்குத் தொடர்ந்து பாலியல் தொந்தரவு கொடுத்ததாகக் கூறப்படுகிறது. கடந்த5-ம் தேதி இக்கல்லூரியில் பொருளாதாரத் துறையில் உதவி பேராசிரியராக பணிபுரியும் குமார் 17 வயது சிறுமியின் தொலைப்பேசிக்குத் தொடர்பு கொண்டு தவறான முறையில் பேசி, புதுச்சேரிக்குப் போகலாம் எனக் கூறி அழைத்ததாகவும், அதற்குச் சிறுமி மறுத்துவிட்டதாகவும், மேலும் அன்று இரவு 9 மணி அளவில் வீடியோ கால் மூலம் சிறுமியை தொலைப்பேசியில் தொடர்பு கொண்டு தொடர்ந்து பாலியல் தொந்தரவு கொடுத்ததாக ஆடியோ சமூக வலைதளங்களில் வைரலாகியுள்ளது. இது குறித்து நடந்த சம்பவத்தைச் சிறுமி பெற்றோரிடம் கூறி கதறி அழுதுள்ளார். இதனால் அதிர்ச்சியடைந்த பெற்றோர் திண்டிவனம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளனர். இப்புகாரின் அடிப்படையில் பேராசிரியர் குமார் மீது போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்து, கைது செய்து விழுப்புரம் போக்சோ நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி நீதிமன்ற உத்தரவின் பேரில் சிறையிலடைத்தனர்.

# சுற்றுலா விசாவில் வேலைக்கு செல்ல வேண்டாம் - வெளிநாடுகளில் ஆபத்தில் சிக்க வாய்ப்பு,



சென்னை: பிப்-10 சுற்றுலா விசாவில் வெளிநாடுகளுக்கு வேலைக்குச் செல்ல வேண்டாம் என்று சைபர் க்ரைம் கூடுதல் டிஜிபி சந்தீப் மிட்டல் தெரிவித்தார். மத்திய வெளியுறவுத் துறை சார்பில் வெளிநாடு செல்வோர் பாதுகாப்பான பயணத்தை மேற்கொள்வது தொடர்பான ‘பாத்து போங்க’ விழிப்புணர்வு நடைபயணம் சென்னை பெசன்ட் நகர் கடற்கரையில் நேற்று காலை நடைபெற்றது. குடிபெயர்வோர் பாதுகாவலர் ஜெனரல் சுரிந்தர் பகத், சைபர் க்ரைம் கூடுதல் டிஜிபி சந்தீப் மிட்டல் ஆகியோர் நடைபயணத்தை தொடங்கி வைத்தனர். அயலகத் தமிழர் நலத்துறை ஆணையர் கிருஷ்ணமூர்த்தி உட்பட 400-க்கும் மேற்பட்டோர் நடைபயணத்தில் பங்கேற்றனர். சைபர் க்ரைம் கூடுதல் டிஜிபி சந்தீப் மிட்டல் செய்தியாளர்களிடம் கூறும்போது, “அதிக அளவில் வெளி நாடுகளுக்கு வேலைக்காக செல்கின்றனர். ஆனால், பெரும்பாலானோர் முறையாக செல்வதில்லை. சுற்றுலா விசாவில் செல்கின்றனர். அங்கு மிரட்டலுக்குப் பயந்து, தவறான செயல்களில் ஈடுபட தொடங்குகின்றனர். முதலில் சுற்றுலா விசாவில் சென்று, பிறகு வேலைக்கான விசா வாங்கி கொள்ளலாம் என்று யாராவது தெரிவித்தால், அவர்களை நம்பி போக வேண்டாம். அதுபோல் செல்வதால் ஆபத்துள்ளது” என்றார். குடிபெயர்வோர் பாதுகாவலர் ஜெனரல் சுரிந்தர் பகத் பேசும்போது “வெளிநாடுகளுக்கு பாதுகாப்பாக எப்படி செல்வது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவே இந்த நிகழ்வு நடைபெறுகிறது. சமூக வலைதளங்கள் மூலமாகவும் விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறோம். தமிழக அரசு போதுமான ஒத்துழைப்பை வழங்கி வருகிறது” என்றார். அயலகத் தமிழர் நலத்துறை ஆணையர் கிருஷ்ணமூர்த்தி கூறும்போது, “வெளிநாடுகளுக்கு வேலைக்காக செல்பவர்கள் பதிவு பெற்ற முகவர்கள் மூலமாக மட்டுமே செல்ல வேண்டும். பதிவு பெறாத முகவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது” என்றார்.

# சென்னை | முதியவரின் வங்கி பணம் ரூ.10 லட்சம் மோசடி: கல்லூரி மாணவி மீது போலீஸார் வழக்கு




சென்னை: பிப்-10 முதியவரின் வங்கிக் கணக்கிலிருந்து ரூ.10 லட்சத்தை மோசடியாக எடுத்ததாக கல்லூரி மாணவி மீது போலீஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர். சென்னை அசோக் நகர், 19-வது அவென்யூவை சேர்ந்தவர் கலாவதி (74). இவர், தனியார் கல்லூரி ஒன்றில் பேராசிரியராக பணியாற்றி ஓய்வு பெற்றவர். இவரது கணவர் மணி (80). இவர்களது மகன் செந்தில் அமெரிக்காவில் பணியாற்றி வருகிறார். கலாவதி மற்றும் அவரது கணவர் வயது முதிர்வின் காரணமாக வீட்டு வேலைக்காக ஆள் தேடினர். அப்போது, தெரிந்த நபர் மூலம், தனியார் கல்லூரி ஒன்றில் 2-ம் ஆண்டு பி.காம். படித்துவரும் திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த 18 வயதுடைய மாணவியை வீட்டு வேலைகள் செய்ய பகுதி நேரமாக பணியமர்த்தி இருந்தனர். வயது முதிர்வு காரணமாக கணவன், மனைவி இருவரும் வெளியே சென்று பொருள் வாங்குவது, ஏடிஎம்-மில் பணம் எடுப்பதில் சிக்கல் இருந்தது. இதையடுத்து, ஏடிஎம் கார்டு மற்றும் அதன் ரகசிய எண்ணை மாணவியிடம் அளித்திருந்தனர். இந்நிலையில், கடந்த இரு வாரங்களுக்கு முன், மணி உடல் நலக்குறைவால் உயிரிழந்தார். இதையடுத்து, அவரது மகன் செந்தில் குமார், அமெரிக்காவிலிருந்து வந்து, இறுதிச் சடங்குகளை முடித்துவிட்டு வீட்டில் தங்கினார். அப்போது, தந்தையின் செல்போனை பார்த்தபோது, அதில், குறுஞ்செய்திகள் அனைத்தும் அழிக்கப்பட்டிருந்தது. இதனால், சந்தேகமடைந்த, அவர் வங்கிக்கு சென்று தந்தையின் கணக்கு குறித்து விசாரித்தார். இதில், அவரது வங்கிக் கணக்கிலிருந்து ரூ.10 லட்சம் எடுக்கப்பட்டது தெரியவந்தது. இது தொடர்பாக சம்பந்தப்பட்ட கல்லூரி மாணவியிடம் விசாரித்தபோது, சரியாக பதில் அளிக்கவில்லை. இதையடுத்து, இதுகுறித்து செந்தில் கே.கே.நகர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன்படி, போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்து வருகின்றனர். முதல் கட்டமாக சம்பந்தப்பட்ட மாணவியிடம் விசாரணை நடைபெற்று வருகிறது.

# சென்னை | சீமராஜா பட நடிகர் மீது தாக்குதல்




சென்னை: பிப்-10 நட்சத்திர விடுதி மதுபாரில் நடிகர் மீது தாக்குதல் நடத்தப்பட்டது குறித்து தேனாம்பேட்டை போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். இதுகுறித்து போலீஸ் தரப்பில் கூறப்படுவதாவது: சீமராஜா உள்ளிட்ட திரைப்படங்களில் நடித்தவர் நடிகர் ரிஷிகாந்த் (34). சென்னை அபிராமபுரத்தில் வசிக்கிறார். இவர் நேற்று அதிகாலை நுங்கம்பாக்கத்தில் உள்ள பிரபலமான தனியார் நட்சத்திர விடுதி பாருக்கு சென்றிருந்தார். அப்போது அவருக்கு ஏற்கெனவே அறிமுகமான, தேனாம்பேட்டையை சேர்ந்த கார் ஷோரூமில் பணியாற்றும் ஹரிஷ் (33) என்பவர், ஓர் இளம் பெண்ணுடன் அங்கு நடனமாடிக் கொண்டிருந்தார். இதைப் பார்த்து நடிகர் ரிஷிகாந்த் கிண்டல் செய்ததாக கூறப்படுகிறது. ஆத்திரமடைந்த ஹரிஷ், நடிகர் ரிஷிகாந்திடம் தகராறில் ஈடுபட்டுள்ளார். இதையடுத்து, பாரில் இருந்த பவுன்சர்கள் இருவரையும் சமாதானப்படுத்தி அனுப்பி வைத்துள்ளனர். பின்னர், வாகன நிறுத்துமிடத்தில் உள்ள தனது காரை எடுப்பதற்காக, ரிஷிகாந்த் சென்றுள்ளார். அவரை பின் தொடர்ந்து வந்த ஹரிஷ் தாக்குதல் நடத்திவிட்டு தப்பியுள்ளார். இதில் ரிஷிகாந்துக்கு கண் புருவத்தில் காயம் ஏற்பட்டு தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பினார். பின்னர், அவர் தாக்குதல் குறித்து தேனாம்பேட்டை காவல் நிலையத்தில் புகார் தெரிவித்தார். அதன்படி, போலீஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

# போக்குவரத்துக் கழகங்களில் தனியார்மயக் கொள்கையை கண்டித்து தமிழகம் முழுவதும் பிப்.13-ல் ஆர்ப்பாட்டம்



பிப்-10 போக்குவரத்துக் கழகங்களில் தனியார்மயக் கொள்கையை கண்டித்து தமிழகம் முழுவதும் பிப்.13-ம் தேதி போக்குவரத்து தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளனர். இது தொடர்பாக சிஐடியு, ஏஐடியுசி, டிடிஎஸ்எப் உள்ளடங்கிய போக்குவரத்துக் கழகங்களில் செயல்படும் தொழிற்சங்க கூட்டமைப்பு வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: போக்குவரத்துக் கழகங்களில் ஏற்படும் இழப்பை ஈடு செய்வது தொடர்பாக பிறப்பித்த அரசாணையின் அடிப்படையில் வரவுக்கும் செலவுக்குமான வித்தியாசத் தொகையை பட்ஜெட்டில் ஒதுக்க வேண்டும். கடந்த 21 மாதங்களாக ஓய்வு பெற்றவர்களுக்கு வழங்கப்படாமல் இருக்கும் பணப்பலனை உடனடியாக வழங்க வேண்டும். முதலில் ஊதிய ஒப்பந்த பேச்சுவார்த்தையை நடத்தி, முடித்த பிறகு தொழிற்சங்கங்களின் அங்கீகார தேர்தலை நடத்தலாம். இதற்கிடையே, ஊதிய உயர்வின் நிலுவைத் தொகையை வழங்க வேண்டும். சொற்ப அளவில் போக்குவரத்து ஓய்வூதியர்களுக்கு அகவிலைப்படி உயர்வு வழங்கியது ஏற்புடையதல்ல. பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்துவதோடு, காலிப்பணியிடங்களையும் பூர்த்தி செய்ய வேண்டும். போக்குவரத்துக் கழகங்களை மேம்படுத்துவதற்கு பதில், அரசு தனியார்மய முயற்சியில் ஈடுபட்டுள்ளது. தனியாருக்கு மினி பேருந்து அனுமதி வழங்கவும், ப்ரீமியம் சர்வீஸ் என்னும் பெயரில் தனியார் பேருந்துகளை இயக்குவதற்கும் பிறப்பிக்கப்பட்ட அரசாணைகளை ரத்து செய்ய வேண்டும். போக்குவரத்துக் கழகங்களை சீர்குலைக்கும் தனியார்மய நடவடிக்கைகளைக் கைவிட வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, பிப்.13-ம் தேதி அனைத்து மண்டல தலைமையகங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெறும். அன்றைய தினம் மாலை சென்னையில் விளக்கக் கூட்டம் நடைபெறும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தமிழகத்தில் 15-ம் தேதி வரை வறண்ட வானிலை

சென்னை: பிப்-10 தமிழகத்தில் இன்றுமுதல் 15-ம் தேதி வரை வறண்ட வானிலை நிலவக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பு: தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் இன்றுமுதல் 15-ம் தேதி வரை பொதுவாக வறண்ட வானிலை நிலவக்கூடும். காலை வேளையில் லேசான பனிமூட்டம் காணப்படும். ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான வெப்ப அளவுகளின்படி, சமவெளி பகுதிகளில் அதிகபட்சமாக ஈரோட்டில் 34.6 டிகிரி செல்சியஸ், கரூர் பரமத்தியில் 15.5 டிகிரி செல்சியஸ் பதிவாகியுள்ளது. சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். காலை வேளையில் பொதுவாக லேசான பனி மூட்டம் நிலவக்கூடும். அதிகபட்ச வெப்பநிலை 33 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 23 டிகிரி செல்சியஸை ஒட்டி இருக்கக்கூடும். மீனவர்களுக்கான எச்சரிக்கை ஏதும் இல்லை. இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.


# ரூ.1 கோடியும் கொடுக்கவில்லை; அரசு வேலையும் தரவில்லை - மறைந்த அரசு மருத்துவர் லட்சுமி நரசிம்மன் மனைவி அனுராதா குற்றச்சாட்டு





சென்னை: பிப்-10 அரசு மருத்துவர்களுக்கு நியாயமான ஊதியம் உள்ளிட்ட பலன்கள் கிடைக்கும் வகையில் அரசாணை 354-ஐ அமல்படுத்தக் கோரி இறுதிவரை போராடியவர் அரசு மருத்துவர் லட்சுமி நரசிம்மன். இவர் கடந்த 2020 பிப்.6-ம் தேதி உயிரிழந்தார். இதுவரை இந்த அரசாணையும் அமலாகவில்லை. இந்த பின்னணியில் 'மருத்துவர் லட்சுமி நரசிம்மனின் உயிர்த் தியாகத்துக்கு மதிப்பில்லையா?' என்ற தலைப்பில் அரசு மருத்துவர்களுக்கான சட்டப் போராட்டக்குழு தலைவர் எஸ்.பெருமாள் பிள்ளை எழுதிய கட்டுரை 'இந்து தமிழ் திசை' நாளிதழில் கடந்த 7-ம் தேதி வெளியானது. இதற்கு மறுப்பு தெரிவித்து, மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் ஜெ.சங்குமணி வெளியிட்ட அறிக்கையில், "அரசாணை 354-ஐ அமல்படுத்துவது குறித்து மருத்துவ சங்கங்களுக்குள் கருத்து வேறுபாடு காரணமாக தீர்வு எட்டப்படவில்லை. இதுகுறித்து ஒற்றுமையுடன் ஒருமித்த கருத்தை தெரிவித்தால் கோரிக்கையை நிறைவேற்ற அரசு தயாராக உள்ளது. மறைந்த மருத்துவர் லட்சுமி நரசிம்மன் வாரிசுதாரர்களுக்கு பணி வழங்க அமைச்சர் உத்தரவிட்டும், இதுவரை அவர்கள்ஏற்கமுன்வரவில்லை. மேலும் பணியின்போது உயிரிழந்த லட்சுமி நரசிம்மன் உள்ளிட்ட 6 மருத்துவர்களின் வாரிசுதாரர்களுக்கு தலா ரூ.1 கோடி நிதி, கடந்த ஜன.10-ம் தேதி வழங்கப்பட்டது" என தெரிவித்திருந்தார். இந்நிலையில், மறைந்த லட்சுமி நரசிம்மனின் மனைவி அனுராதா, 'இந்து தமிழ் திசை' நாளிதழை தொடர்பு கொண்டு கூறியதாவது: எங்கள் குடும்பத்துக்கு ரூ.1 கோடி நிதி கொடுத்ததாகவும், பணி நியமன ஆணை வழங்கியதாகவும் மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் ஜெ.சங்குமணி தெரிவித்துள்ளார். இப்படி உண்மைக்கு மாறான தகவலை, இப்படி வெளிப்படையாக சொல்வதற்கு ஏதோ உள்நோக்கம் உள்ளது. நான் அவரை தொடர்பு கொண்டு கேட்டாலும் சரியான விளக்கம் அளிக்கவில்லை. அப்படியே ரூ.1 கோடி வழங்குவதாக இருந்தாலும் அது அரசு பணம் இல்லை. ஒவ்வொரு அரசு மருத்துவரும் மாதம்தோறும் தங்கள் ஊதியத்தில் இருந்து வழங்கும் தொகையாகும். எனவே, இந்த விவகாரத்தில் ரூ.1 கோடியும் கொடுக்கவில்லை. பணிநியமன ஆணையும் வழங்கவில்லை. இந்த இரண்டையும் நாங்கள் கோரியதும் இல்லை. உண்மைக்கு மாறான தகவலை தெரிவித்ததற்காக நீதிமன்றம் செல்ல இருக்கிறேன். எனது கணவரின் இலக்கான அரசாணை 354-ஐ அமல்படுத்த வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார். இந்நிலையில், போராட்டக் குழு தலைவர் எஸ்.பெருமாள் பிள்ளை வெளியிட்ட அறிக்கை: மறைந்த லட்சுமி நரசிம்மன் குடும்பத்துக்கு ரூ.1 கோடி நிதி வழங்கியதாகவும், அரசு வேலை வழங்க முன்வந்ததாகவும் ஜெ.சங்குமணி கூறியது முற்றிலும் தவறான தகவல். அரசாணை 354-ஐ அமல்படுத்த அனைத்து அரசு மருத்துவர் சங்கங்களுமே வலியுறுத்தியுள்ளன. ஒருமித்த கருத்து இல்லை என்பது அப்பட்டமாக தவறான தகவல். இதனை உடனடியாக அவர் திரும்ப பெற வேண்டும். இல்லாவிட்டால் மிகப்பெரிய போராட்டத்தை முன்னெடுப்போம். முதல்வர் தலையிட்டு அரசாணை 354-ஐ நடைமுறைப்படுத்த வேண்டும். எதிர்க்கட்சி தலைவராக இருந்தபோது எங்கள் போரட்டத்துக்கு ஆதரவு தெரிவித்த அவர், தற்போது ஆட்சிக்கு வந்தும் இதுவரை தன் தந்தையின் அரசாணையை நிறைவேற்றவில்லை. உயர் நீதிமன்றம் உத்தரவிட்டும் நிறைவேற்றவில்லை. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார். இந்த விவகாரத்தில் மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மருத்துவர் ஜெ. சங்குமணியின் விளக்கத்துக்காக காத்திருக்கிறோம்.

# 2 நாட்களில் ரூ.41 கோடி வசூல் தண்டேல் படத்துக்கு வரவேற்பு



உலகளவில் 'தண்டேல்' திரைப்படம் 2 நாட்களில் ரூ.41.20 கோடி வசூல் செய்திருப்பதாக படக்குழு அறிவித்திருக்கிறது. சந்து மொண்டேட்டி இயக்கத்தில் நாக சைதன்யா, சாய் பல்லவி உள்ளிட்ட பலர் நடிப்பில் வெளியாகியுள்ள படம் 'தண்டேல்'. கீதா ஆர்ட்ஸ் நிறுவனம் தயாரித்துள்ள இப்படம் உலகமெங்கும் பிப்ரவரி 7ம் தேதி வெளியானது. இப்படத்துக்கு ஆந்திரா மற்றும் தெலங்கானாவில் பெரும் வரவேற்பு கிடைத்திருக்கிறது. ஆனால் தமிழ் மற்றும் இந்தி ஆகிய மொழிகளில் எதிர்பார்த்த வரவேற்பு பெறவில்லை. உலகளவில் முதல் நாளில் ரூ.21 கோடியும், இரண்டு நாட்கள் வசூல் மொத்தமாக 41.20 கோடி செய்திருப்பதாக படக்குழு அதிகாரபூர்வமாக அறிவித்திருக்கிறது. இந்த வசூல் நிலவரத்தினால் படக்குழு பெரும் மகிழ்ச்சியில் இருக்கிறது. மேலும், இந்த வரவேற்பினால் ஆந்திராவில் திரையரங்குகளுக்கு படக்குழுவினர் சென்று வருகிறார்கள். 'தண்டேல்' படத்தின் கதை உண்மைச் சம்பவத்தினை மையப்படுத்தி எடுக்கப்பட்டதாகும். இதன் பாடல்கள் மக்கள் மத்தியில் அமோக வரவேற்பைப் பெற்றுள்ளது. மேலும், தொடர்ச்சியாக வசூல் அதிகரித்து வருவதால் விரைவில் ரூ.100 கோடி வசூலை தொடும் என்ற நம்பிக்கையில் இருக்கிறது படக்குழு.

# இளையராஜா பயோபிக் தயாரிப்பில் இணைந்த ஏஜிஎஸ் நிறுவனம்!




இசையமைப்பாளர் இளையராஜாவின் வாழ்க்கையை தழுவி படமொன்று அவருடைய பெயரிலேயே அறிவிக்கப்பட்டது. அதற்கான முதற்கட்ட பணிகளும் தொடங்கப்பட்டன. அதன் இயக்குநர் அருண் மாதேஸ்வரன் இளையராஜாவுடன் இணைந்து கதை விவாதத்தில் ஈடுபட்டு வந்ததற்கான புகைப்படங்களும் வெளியாகின. ஆனால், அப்பணிகள் பாதியிலேயே நிறுத்தப்பட்டன. அதில் இளையராஜாவாக நடிக்கவிருந்த தனுஷும் இதர படங்களில் கவனம் செலுத்த தொடங்கினார். இதனால் 'இளையராஜா' பயோபிக் கைவிடப்பட்டதாக செய்திகள் வெளியாகின. அதற்கு தயாரிப்பு பொறுப்பில் இருந்த கனெக்ட் மீடியா நிறுவனம் மறுப்பு தெரிவித்தது. தற்போது இளையராஜா பயோபிக் தயாரிப்பு பணிகள் மீண்டும் தொடங்கப்படும் என தெரிகிறது. ஏனென்றால் கனெக்ட் மீடியா நிறுவனத்துடன் இணைந்து ஏஜிஎஸ் நிறுவனமும் தயாரிக்கவுள்ளது. இதற்கான பேச்சுவார்த்தை முடிவுற்று, ஒப்பந்தப் பணிகள் தொடங்கவுள்ளன. இந்திப் படமொன்றை இயக்கவுள்ளார் அருண் மாதேஸ்வரன். அதனை முடித்துவிட்டு இளையராஜா பயோபிக்கை இயக்குவார் என தெரிகிறது.

# சென்னையில் பிப்.14-ல் கோல்ஃப் போட்டி



சென்னை: பிப்-10 ரோட்டரி கிளப் ஆஃப் சென்னை கேபிடல், மெட்ராஸ் வெஸ்ட் ரவுண்ட் டேபிள் 10 ஆகியவை இணைந்து, சென்னை கோல்ஃப் லீக் 2025 போட்டியை வரும் பிப்ரவரி 14-ம் தேதி அன்று தமிழ்நாடு கோல்ஃப் ஃபெடரேஷன் மைதானத்தில் நடத்த உள்ளன. இரண்டு அமைப்புகளும் மேற்கொண்டுவரும் சமூக சேவைகளுக்கு நிதி திரட்ட இந்தப் போட்டி நடத்தப்படுகிறது. இந்த போட்டியில் 10 அணிகள் இடம்பெறுகின்றன. ஒவ்வொரு அணியும் 8 வீரர்களை உள்ளடக்கி இருக்கும். போட்டிகள் மதியம் 12 மணிக்குத் தொடங்கும். பிப்ரவரி 16 அன்று பரிசளிப்பு விழா நடைபெறும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# சென்னை ஓபன் டென்னீஸ் இறுதிப்போட்டியில் இந்திய ஜோடி தோல்வி



சென்னை: பிப்-10 ஏடிபி சாலஞ்சர் சென்னை ஓபன் டென்னிஸ் தொடர் சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள எஸ்டிஏடி மைதானத்தில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதிப் போட்டியில் இந்தியாவின் சாகேத் மைனேனி, ராம்குமார் ராமநாதன் ஜோடி, ஜப்பானின் ஷின்டாரோ மோச்சிசுகி, கைடோ உசுகி ஜோடியுடன் பலப்பரீட்சை நடத்தியது. இதில் சாகேத் மைனேனி, ராம்குமார் ராமநாதன் ஜோடி 4-6, 4-6 என்ற நேர் செட் கணக்கில் தோல்வி அடைந்தது. ஆடவர் ஒற்றையர் பிரிவு அரை இறுதி ஆட்டத்தில் சுவீடனின் இலியாஸ் யெமர் 7-6(5), 7-6(2) என்ற செட் கணக்கில் கிரேட் பிரிட்டனின் பில்லி ஹாரிஸையும், பிரான்ஸின் கைரியன் ஜாக்கெட் 6-4, 6-1 என்ற நேர் செட் கணக்கில் செக்குடியரசின் டாலிபோர் ஸ்வர்சினாவையும் வீழ்த்தினர். இன்று நடைபெறும் இறுதிப் போட்டியில் இலியாஸ் யெமர், கைரியன் ஜாக்கெட் பலப்பரீட்சை நடத்துகின்றனர்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd s treet, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA.V. Cell-94436 99066